# Eastern University, Sri Lanka
## Faculty of Commerce and Management
## External Degree
## Part I Examination in Business Administration - 2009 / 2010 (August 2014)
## (Proper/Repeat)
## EXB 202 Advanced Financial Accounting

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது. நேரம்: மூன்று மணித்தியாலங்கள்

---

TRO plc கம்பனியானது ஒவ்வொன்றும் ரூ.10 விலையான 100,000 புதிய சாதாரண பங்குகளை வழங்குவதற்கான விண்ணப்பங்களை பொதுமக்களிடமிருந்து கோரியது. இப் பங்கு வழங்கலுக்கான பணம் பின்வருமாறு பெற்றுக்கொள்ளப்பட்டது:

| | பங்கு ஒன்றுக்கு ரூபா |
|---|---|
| விண்ணப்பத்தில் | 3 |
| ஒதுக்கத்தில் | 4 |
| அழைப்பில் | 3 |
| | 10 |

125,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. ஆயினும் 6 பங்குகளுக்கு விண்ணப்பத்தோருக்கு 5 பங்குகளை ஒதுக்குதல் என்னும் விகிசார அடிப்படையில் பங்குகளுக்கான ஒதுக்கல் செய்யப்பட்டன.

மேற்கூறப்பட்ட ஒழுங்கின் படி பங்குகளுக்கான ஒதுக்கீடும் அழைப்பும் மேற்கொள்ளப்பட்ட போது சுமன் எனும் விண்ணப்பதாரி அவருக்கு ஒதுக்கப்பட்ட 1500 பங்குகளுக்குரிய ஒதுக்கல் பணத்தை செலுத்தத் தவறி விட்டார். அவரது பங்குகள் யாவும் உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர் அழைப்பு விடப்பட்ட போது மதன் எனும் விண்ணப்பதாரி அவர் விண்ணப்பித்திருந்த 600 பங்குகளுக்கு ஒதுக்கப்பட்ட பங்குகளுக்குரிய அழைப்புப் பணத்தை செலுத்தத் தவறினார். அவரது பங்குகளும் பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர் மதனின் சகல பங்குகளும் உட்பட 1000 பங்குகள் பங்கு ஒன்று ரூ.10 விலையில் முற்றாகச் செலுத்த வேண்டியதாகவும் இதற்கான பணத்தை உரிய நேரத்தில் பெறும் விதமாகவும் மீள வழங்கல் செய்யப்பட்டன. ஏனைய பங்குகளுக்குரிய பணமும் மீள வழங்கப்பட்ட பங்குகளுக்குரிய பணமும் உரிய நேரத்தில் பெறப்பட்டன.

**வேண்டப்படுவது.**

(i) தேவையான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக (காசு உட்பட)

(ii) பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்குக

**(20 புள்ளிகள்)**

**02.** 31.12.2013 இல் உள்ளவாற்றான KLF plc கம்பனியின் ஐந்தொகை பின்வருமாறு:

| பொறுப்புக்கள் | ரூபா | சொத்துக்கள் | ரூபா |
|---|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10 ) | 400000 | காணி கட்டடம் | 450000 |
| 10% மீட்கத்தக்க முன்னுரிமை பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10) | 500000 | தளபாடமும் பொருத்திகளும் | 200000 |
| இலாப நட்டக் கணக்கு | 200000 | முதலீடுகள் | 300000 |
| பொது ஒதுக்கம் | 250000 | இருப்புக்கள் | 150000 |
| கடன்கொடுத்தோர் | 100000 | கடன்பட்டோர் | 50000 |
| முன்னுரிமை பங்கிலாப சென்மதி | 50000 | காசும் வங்கியும் | 350000 |
| | **1500000** | | **1500000** |

10% மீட்கத்தக்க முன்னுரிமை பங்குகள் அனைத்தும் 01.01.2014 இல் மீட்கப்பட்டன. ரூ.200000 பெறுமதியான முதலீடுகள் கொள்விலையுடன் 25% கூட்டிய விலையில் விற்கப்பட்டன. இலாப நட்டக் கணக்கில் ரூ.150000 மீதி இருக்கத்தக்கதாக மீட்புக்கு கிடைக்கத்தக்க வருமான ஒதுக்கங்களை எல்லாவற்றையும் பயன்படுத்திய பின்னர் மிகுதிக்கு போதுமான அளவு புதிய சாதாரண பங்குகள் ரூ.10 விலையில் வழங்கப்பட்டன. முன்னுரிமை பங்கிலாப சென்மதி உட்பட முன்னுரிமைப் பங்குதாரருக்குரிய கொடுப்பனவுகள் யாவும் முறையாக மேற்கொள்ளப்பட்டன.

**வேண்டப்படுவது :**

பின்வருவனவற்றைத் தயாரிக்குக:

(அ) பொருத்தமான பேரேட்டுக் கணக்குகள்

(ஆ) முன்னுரிமை பங்குகள் மீட்பின் பின்னரான ஐந்தொகை

**(20 புள்ளிகள்)**

M கம்பனியானது N கம்பனியின் 80% சாதாரண பங்குகளை 01.07.2013 இல் ரூ.250000 விற்கு கொள்வனவு செய்தது. 31.12.2013 இல் உள்ளவாறான அக்கம்பனிகளின் ஐந்தொகைகள் பின்வருமாறு:

| பொறுப்புக்கள் | M கம்பனி | N கம்பனி |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (பங்கு ஒன்று ரூ.10) | 400000 | 200000 |
| பொது ஒதுக்கம் | 150000 | 150000 |
| இலாப நட்டக் கணக்கு | 250000 | 100000 |
| கடன்கொடுத்தோர் | 200000 | 150000 |
| | **1000000** | **600000** |
| **சொத்துக்கள்** | | |
| காணி கட்டடம் | 400000 | 350000 |
| பொறி இயந்திரம் | 200000 | 100000 |
| N கம்பனியின் 16000 சாதாரண பங்குகள் மீதான முதலீடு | 250000 | - |
| இருப்புக்கள் | 80000 | 50000 |
| கடன்பட்டோர் | 40000 | 45000 |
| வங்கி மீதி | 30000 | 55000 |
| | **1000000** | **600000** |

**மேலதிக தகவல்கள் :**

(i) 01.01.2013 இல் N கம்பனியின் பொது ஒதுக்கக் கணக்கில் ரூ.50000 வும் இலாபநட்டக் கணக்கில் ரூ.20000 வரவு மீதியும் காணப்பட்டன. N கம்பனியின் இலாபங்கள் 2013 இல் ஆண்டு முழுவதும் சமனாக உழைக்கப்பட்டிருந்தன.

(ii) N கம்பனியின் கடன்பட்டோர் M கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூ.10000 வை உள்ளடக்கியுள்ளது.

(iii) கொள்வனவுத் திகதியில் N கம்பனியின் காணி கட்டடம் ரூ.360000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டன.

**வேண்டப்படுவது :**

31.12.2013 இல் உள்ளவாறான திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்குக.

**(20 புள்ளிகள்)**

**04.** JIO கம்பனியானது WPS மோட்டர்ஸ் கம்பனியிடமிருந்து வாடகைக் கொள்வனவு முறையின் கீழ் முச்சக்கர வண்டி ஒன்றை 01.01.2011 இல் கொள்வனவு செய்தது. வாடகைக் கொள்வனவு ஒப்பந்தத்தின் படி ரூ.69000 உடன் காசாசையும் 31.12.2011 இலிருந்து தொடங்கும் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் ரூ.133100 வருடாந்த தவணைக் கட்டணத்தை மூன்று ஆண்டுகளுக்கு செலுத்துதல் வேண்டும். வாடகைக் கொள்வனவு வட்டி வீதம் ஆண்டுக்கு 10% ஆகும். இவ்வட்டி வருடாந்த தவணைக் கட்டணத்தில் உள்ளடங்கியுள்ளது.

**வேண்டப்படுவது :**

1. வாடகைக் கொள்வனவு மொத்த வட்டியையும் வருடாந்த வட்டியையும் கணிக்க.

2. முச்சக்கர வண்டியின் காசு விலையைக் கணிக்க.

3. முச்சக்கர வண்டியின் வாடகைக் கொள்வனவு விலை என்ன?

4. 2011, 2012, 2013 ஆண்டுகளுக்கு வாடகை கொள்வனவாளரின் ஏட்டில் காசு விலையைப் பதியும் முறையில் பின்வரும் கணக்குகளைத் தயாரிக்குக:

    i. முச்சக்கர வண்டி கணக்கு
    ii. WPS கம்பனிக் கணக்கு
    iii. வாடகை கொள்வனவு வட்டிக்கணக்கு

**(20 புள்ளிகள்)**

. JSA plc கம்பனியின் 31.12.2013 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பின்வருமாறு:

31.12.2013 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று

| | ரூபா(000) | ரூபா(000) |
|---|---|---|
| விற்பனைகள் | | 66000 |
| கழி : விற்பனைக் கிரயம் | | 30000 |
| மொத்த இலாபம் | | 36000 |
| கழி : செயற்பாட்டுச் செலவுகள் | 26000 | |
| பெறுமானத் தேய்வு | 5000 | |
| வட்டி | 1000 | 32000 |
| வரி கழிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | | 4000 |
| கழி : வரி | | 1000 |
| வரி கழித்த பின் செயற்பாட்டு இலாபம் | | 3000 |
| கழி : பங்கிலாபம் | | 400 |
| | | 2600 |
| மீதி முன் கொண்டு வந்தது | | 4500 |
| மீதி முன் கொண்டு சென்றது | | 7100 |

31.12.2012 மற்றும் 31.12.2013 இல் உள்ளவாறான ஐந்தொகைகள்

| பொறுப்புக்கள் | 2012 | 2013 | சொத்துக்கள் | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | | ரூபா (000) | ரூபா (000) |
| சாதாரண பங்கு மூலதனம் | 10000 | 10000 | நிலையான சொத்துக்கள்(கிரயம்) | 38000 | 45000 |
| இலாப நட்டக் கணக்கு | 4500 | 7100 | பெறு. தேய்வு ஏற்பாடு | (18000) | (23000) |
| 10% நீண்டகாலக் கடன் | 10000 | 9000 | | 20000 | 22000 |
| கடன்கொடுத்தோர் | 2300 | 2600 | இருப்புக்கள் | 5000 | 4000 |
| வரி சென்மதி | 200 | 150 | கடன்பட்டோர் | 2000 | 1500 |
| செலவுகள் சென்மதி | 500 | 250 | காசு | 1000 | 2000 |
| பங்கிலாப சென்மதி | 500 | 400 | | | |
| | **28000** | **29500** | | **28000** | **29500** |

**வேண்டப்படுவது :**

JSA plc கம்பனியின் 31.12.2013 இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்றினை நேர்முறையில் தயாரிக்குக.

**(20 புள்ளிகள்)**